بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 3
வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 43
ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது
துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

15 சஃபர் 1440 ஹிஜ்ரி கமரி 25 அஹா 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
25 அக்டோபர் 2018

## அல்லாஹ்வின் கட்டளை

وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ فَلِاَنْفُسِكُمْ ؕ وَمَا تُنْفِقُوْنَ اِلَّا ابْتِغَآءَ وَجْهِ اللّٰهِ ؕ وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ ○

உங்கள் செல்வத்திலிருந்து எதைச் செலவு செய்தாலும் அது உங்களுக்கே (நன்மை தரும்). நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடியல்லாமல் செலவு செய்வதில்லை. செல்வத்திலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும் அது முழுமையாக உங்களுக்குத் திருப்பித் தரப்படும். மேலும் உங்களுக்கு அநீதி இழைக்கப்பட மாட்டாது. (2:273)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**இந்த பிலாத்து என்பவர் மஸீஹ் ஈஸப்னு மர்யமின் பிலாத்துவை விட மிகவும் நல்ல மனிதராக நடந்து கொண்டுள்ளார். நீதிமன்ற நடவடிக்கைகளில் அவர் மிகவும் தைரியத்துடனும், உறுதியுடனும் நீதிமன்றத்திற்குக் கட்டுப்பட்டவராக இருந்தார். உயர் இடங்களிலிருந்து வரும் பரிந்துரைகளை அவர் பொருட்படுத்தவேயில்லை. இனம், மதம் மீதுள்ள எண்ணங்கள் எதுவும் அவரிடம் எவ்வித மாற்றத்தையும் சிறிதளவும் ஏற்படுத்தவில்லை. அவர் நீதியை முழுமையாக கடைபிடித்ததன் மூலம் சிறப்பான முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டினார்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

என் மீது தொடரப்பட்ட அவ்வழக்கானது ஹஸ்ரத் ஈஸப்னு மர்யமுக்கு விரோதமாய் உருவாக்கப்பட்ட வழக்கை விட மிகவும் கொடூரமானதாகும். ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கானது மார்க்க விரோதத்தின் அடிப்படையில் மட்டும் உருவாக்கப்பட்டதாகும். அது நீதிபதியிடத்தில் ஓர் அற்பமான விஷயமாக இருந்தது.

இன்னும் சொல்லப்போனால், அது நீதிபதிக்கு ஒரு பிரச்சனையேயல்ல. ஆனால் என் மீது தொடரப்பட்ட வழக்கிலோ நான் கொலை முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தேன். மேலும் மஸீஹுடைய வழக்கில் யூத மார்க்க அறிஞர்கள் சாட்சியம் கூறியது போல் இவ்வழக்கிலும் மவ்லவிமார்கள் என்னும் மார்க்க அறிஞர்களிலிருந்தும் யாராவது சாட்சியம் கூறுவது அவசியமாக இருந்ததால் மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியை இவ்வேலைக்காக இறைவன் தேர்ந்தெடுத்தான்.

மஸீஹுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கும் பொருட்டு அவருக்கு விரோதமாய் சாட்சியம் கூறத் தலைமை புரோகிதன் நீதிமன்றத்திற்கு வந்தது போல் முஹம்மது ஹுஸைன் பட்டாலவியும் நீண்ட அங்கி அணிந்து கொண்டு எனக்கு விரோதமாய் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்திருந்தார்.

ஆனால் இதில் காணப்படும் வேறுபாடு என்னவெனில் யூதர்களின் கண்ணியமானவர்களுக்கு ரோம அரசில் நீதிமன்றத்தில் அமர்வதற்கான இருக்கை அளிக்கப்பட்டு வந்ததால் தலைமை புரோகிதனுக்கு பிலாத்துவின் நீதிமன்றத்தில் அமர்வதற்கு இருக்கை கிடைத்தது. மேலும் அவர்களில் சிலர் நடுவராக (கவுரவ நீதிபதியாக) இருந்த காரணத்தால் தலைமை புரோகிதனும் நீதிமன்றத்தின் விதிகளுக்கேற்ப உட்கார இருக்கை பெற்றிருந்தான். மஸீஹ் இப்னு மர்யம் ஒரு குற்றவாளியைப் போல் நீதிபதிக்கு முன் நின்று கொண்டிருந்தார். ஆனால் எனது வழக்கில் அதற்கு மாறாக நடந்தது. அதாவது நீதிபதி பிலாத்துவின் நிலையில் நீதியின் நாற்காலியில் அப்போது அமர்ந்திருந்த நீதிபதி கேப்டன் டக்லஸ் என் விரோதிகளின் விருப்பத்திற்கு மாறாக நீதிமன்றத்தில் நான் அமர்வதற்கு இருக்கை அளித்தார்.

இந்த பிலாத்து என்பவர் மஸீஹ் ஈஸப்னு மர்யமின் பிலாத்துவை விட மிகவும் நல்ல மனிதராக நடந்து கொண்டுள்ளார். நீதிமன்ற நடவடிக்கைகளில் அவர் மிகவும் தைரியத்துடனும், உறுதியுடனும் நீதிமன்றத்திற்குக் கட்டுப்பட்டவராக இருந்தார். உயர் இடங்களிலிருந்து வரும் பரிந்துரைகளை அவர் பொருட்படுத்தவேயில்லை. இனம், மதம் மீதுள்ள எண்ணங்கள் எதுவும் அவரிடம் எவ்வித மாற்றத்தையும் சிறிதளவும் உண்டு பண்ணவில்லை.

அவர் நீதியை முழுமையாகக் கடைபிடித்தன் மூலம் சிறப்பான முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டினார். அவர் சமுதாயத்திறகுப் பெருமைக்குரியவராகவும், நீதிபதிகளுக்கு முன்மாதிரியாகவும் திகழ்ந்தாரென்று கருதப்படுவாராயின், அது ஒருபோதும் தவறாகாது. நீதியுடன் நடப்பது என்பது சிக்கலான ஒரு விஷயமாகும். எதுவரை ஒருவர் எல்லா தொடர்புகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்ட நிலையில் நீதிமன்றத்தின் இருக்கையில் அமர மாட்டாரோ அதுவரை அவரால் இக்கடமைகளை அருமையான முறையில் நிறைவேற்ற முடியாது. ஆயினும் இந்த பிலாத்து என்பவர் இக்கடமைகளை முழுமையாக நிறைவேற்றினார் என்று நாங்கள் உண்மையாகவே சாட்சியம் பகர்கிறோம்.

முதலாவது பிலாத்து ரோமாராக இருந்த போதிலும் இக்கடமையை அவரால் நல்ல விதமாக நிறைவேற்ற முடியவில்லை. அவருடைய அச்ச உணர்வானது மஸீஹை பெரும் பெரும் இன்னல்களுக்கு இலக்காக்கியது. இந்த வேறுபாடானது நமது ஜமாஅத்தில் எப்பொழுதும் நினைவு கூரத்தக்க ஒன்றாயிருக்கிறது. எதுவரை இவ்வுலகம் இருந்து வருமோ, எந்தெந்த விதமாக இந்த ஜமாஅத் இலட்சக்கணக்கிலும் கோடிக்கணக்கிலும் பல்கிப் பெருகி விடுமோ அந்தந்த விதமாக இந்த

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்கு விஷயங்கள் உள்ளன. அதன்படி எவர் செயலாற்றுவாரோ அவர் முஸ்லிம்களைச் சார்ந்தராகி விடுவார். எவர் அதில் ஒன்றை விட்டு விடுவாரோ அவருக்கு மீதமுள்ள மூன்று விஷயங்களும் எந்தப் பயனும் தராது**

**அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் குறைஷிகளைச் சாராத நபராக இருந்தார்கள். அஸீல் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். மிகவும் ஏழை மனிதராக இருந்தார்கள். அன்னார் குறைஷிய தலைவர்களில் ஒருவரான அக்பா பின் அபீ முயீத்தின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குத் தொண்டாற்றுவதற்காக அன்னாரிடம் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமை கிடைத்ததன் விளைவாக அன்னார் பின்னர் மார்க்க அறிஞராக உருவெடுத்தார்கள்**

**மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதல் முதலில் பொதுவெளியில் திருக்குர்ஆனை ஓதியவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது ஆவார்கள்**

**இறைவனின் எதிரியான இவர்கள் எனது பார்வையில் ஒருபோதும் ஒரு பொருட்டாக இருந்ததில்லை. ஆனால் அவர்கள் அடிக்கின்ற போது அவர்களை ஒரு பொருட்டாகவே நான் கருதவில்லை**

**திருக்குர்ஆன் எப்படி புத்தம் புதிதாக இறங்கியதோ அதே நிலையில் திருக்குர்ஆனை ஓதுவதில் எவர் மகிழ்ச்சியடையக் கூடியவராக இருப்பாரோ அவர் திருக்குர்ஆனை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளட்டும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறைகளில் அன்னாருக்கு மிகவும் நெருக்கமானவராக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் இருந்தார்கள்**

**ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களின் நன்மையின் எடையானது உஹது மலையின் எடையை விட அதிகமாக இருக்கும்**

**அல்லாஹ் நமக்கு இந்த ஒளிமயமான நட்சத்திரங்களின் முன்மாதிரிக்கு ஏற்பவும், நடைமுறைக்கு ஏற்பவும் நடக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **லண்டனிலுள்ள பைத்துல் புதூஃஹ் பள்ளிவாசலில் 28 செப்டம்பர் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த சுற்றுப் பயணங்களுக்கு முன்பாக நான் பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களின் நிலைமைகளையும், சம்பவங்களையும் கூறிக் கொண்டிருந்தேன். இன்று நான் அதே கட்டுரையை மீண்டும் தொடங்குவேன். இன்று நான் எந்த சஹாபாக்களைப் பற்றி கூற உள்ளேனோ அதில் முதலாவது சஹாபி, ஹஸ்ரத் உம்மாரா பின் ஹஸ்ம் ஆவார்கள்.

ஹஸ்ரத் உம்மாரா (ரலி) அவர்கள் பைஅத்தே உக்பா சானியாவில் பங்கு கொண்ட 70 சஹாபாக்களில் ஒருவராவார்கள். அவர்களின் சகோதரர் அம்ர் பின் ஹஸ்ம், ஹஸ்ரத் முஃமர் பின் ஹஸ்ம் அவர்களும் அடங்குவர். பத்ர் போரிலும், உஹது போரிலும், ஏனைய அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டுள்ளார்கள். மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று பனூ மாலிக் பின் நஜ்ஜாரின் கொடி அன்னாரின் கரத்தில் இருந்தது. ஹஸ்ரத் உம்மாரா அவர்களுக்கு ஹஸ்ரத் முஹ்ரஸ் பின் நஸ்லா அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு முர்தத்துகளின் குழப்பம் ஏற்பட்டது. கிளர்ச்சியாளர்கள் முஸ்லிம்களுடன் போரிட்டார்கள். அவர்களுக்கு எதிரான போரில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களுடன் ஹஸ்ரத் உம்மாரா அவர்களும் சேர்ந்து கலந்து கொண்டிருந்தார்கள். யமாமா போரில் அன்னாரின் ஷஹாதத் நிகழ்ந்தது.

(காஸி முஹம்மது சுலைமான் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூலிலிருந்து, பக்கம் 182 – 2015 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள இஸ்லாமிய்யா அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

அன்னாரின் தாயாரின் பெயர் காலிதா பின்த் அனஸ் ஆகும்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 455, கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

அபூ பக்ர் பின் முஹம்மது அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஹ்ல் அவர்களை பாம்பு ஒன்று கடித்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவரை ஹஸ்ரத் உம்மாரா அவர்களிடத்தில் கொண்டு செல்லுங்கள். அவர்

இவருக்கு ஓதி ஊதுவார் என்று கூறினார்கள். அதற்கு நாங்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவர் மரணிக்கும் தருவாயில் இருக்கின்றார் என்று கூறினோம். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் இவரை உம்மாரா அவர்களிடத்தில் கொண்டு செல்லுங்கள். அவர் ஓதி ஊதினால் அல்லாஹ் இவருக்கு ஷிஃபா வழங்கி விடுவான் என்று கூறினார்கள்.

(சபுலுல் ஹுதா வர் ரிஷாது, தொகுதி 10 பக்கம் 771, பாபுர் ராபிஃ ஃபீமான இல்மிஹி (ஸல்) லா சஹாபா மின் லத்கத்துல் அக்ரப் – 1995 ஆம் ஆண்டு பதிப்பு)

நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் அன்னாருக்கு ஓதி ஊதுகின்ற இந்த முறையைக் கற்றுத் தந்திருப்பார்கள். மேலும் துஆவையும் கற்றுக் கொடுத்திருப்பார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓதி ஊதுவதற்கு உம்மாரா அவர்களின் தேவையுடையவர்களாக இருந்தார்கள் என்றோ அல்லது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் ஓதி ஊத முடியாது என்றோ பொருளல்ல. நவூதுபில்லாஹ். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிலரை சில பணிகளுக்கென்று நியமித்திருந்தார்கள். எவ்வாறிருப்பினும், பரிசுத்த ஆற்றல் மற்றும் அருட்கள் அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையனவாகவே இருந்தன.

சீரத் இப்னு ஹிஷாமில் எழுதப்பட்டுள்ளது. மஸ்ஜிது நபவிக்கு முனாஃபிகுகள் வந்து செல்பவர்களாக இருந்தனர். முஸ்லிம்களின் கூற்றைக் கேட்டு அவர்களை ஏளனம் செய்து வந்தனர். சில முறை வெளிப்படையாகவும், சில முறை மறைவாகவும் இந்த வேலைகளைச் செய்து வந்தனர். ஒரு நாள் நயவஞ்சகர்களில் சிலர் பள்ளிக்கு அருளில் ஒன்று கூடி இருந்தார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை தங்களுக்குள் இ ர க சி ய ம் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். எனவே அவர்களை பள்ளிவாசலை விட்டு வெளியேற்றுங்கள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்.

எனவே அவர்கள் பள்ளிவாசலை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப், உமர் பின் கைஸ் ஆகியோரிடம் சென்றார்கள். அவர் பனூ கனம் பின் மாலிக் பின் நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். அறிவீனமான காலகட்டத்தில் அவர்களின் சிலைகளின் கண்காணிப்பாளனாகவும் இருந்தார். அன்னார் அவனது கால்களைப் பிடித்து இழுத்தவாறு பள்ளிவாசலை விட்டு வெளியேற்றி விட்டார்கள். அதற்கு அவன் அபூ அய்யூபே! நீர் என்னை பனூ ஸஃலபாவின் மஜ்லிஸை விட்டு வெளியேற்றி விடுவீரா? என்று கூறிக் கொண்டிருந்தான்.

பின்னர் அன்னார் ராஃபிஃ பின் வதீஆவின் பக்கம் சென்றார்கள். அவனும் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவனாக இருந்தான். அவனை தனது துண்டைக் கொண்டு கட்டினார்கள். பின்னர் வேகமாக இழுத்து அடித்தார்கள். அவனையும் பள்ளிவாசலை விட்டு வெளியேற்றினார்கள். பின்னர் ஒரு அரை கொடுத்தார்கள்.

அபூ அய்யூப் அவர்கள் கூறினார்கள்:

தீய நயவஞ்சகனே! உன் மீது சாபம் உண்டாகட்டுமாக. நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாசலை விட்டு வெளியே சென்று விடு.

ஹஸ்ரத் உம்மாரா பின் ஹஸ்ம் அவர்கள் ஸைது பின் அம்ரிடம் சென்றார்கள். அவனது தாடியைப் பிடித்து இழுத்தவாறு பள்ளிவாசலை விட்டு வெளியேற்றி விட்டார்கள். பின்னர் உம்மாரா அவர்கள் தனது இரண்டு கரங்களையும் எந்த அளவுக்கு வேகமாக அவனது நெஞ்சில் அடித்தார்கள் என்றால் அவன் கீழே விழுந்து விட்டான். அவன் கூறினான். உம்மாரவே! நீர் என்னை காயப்படுத்தி விட்டீர். அதற்கு உம்மாரா கூறினார்கள்: நயவஞ்சகனே! அல்லாஹ் உம்மை அழித்து விடுவானாக. இறைவன் உனக்காக ஆயத்தப்படுத்தி வைத்துள்ள தண்டனையானது இதை விட கடினமானதாகும். எனவே இனி நீ நபி (ஸல்) அவர்களின் பள்ளிவாசலுக்கு அருகில் வரக்கூடாது.

(சீரத் இப்னு ஹிஷாம், பக்கம் 246, பாப் மன் அஸ்லம மின் அஹ்பார்.... 2009 ஆம் ஆண்டு தாரே இப்னு ஹஸமில் அச்சிடப்பட்டது)

தபூக் போரின் போது நபி (ஸல்) அவர்கள் தபூக்கை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். வழிப்பாதையில் ஓரிடத்தில் நபி (ஸல்) அவர்களின் கஸ்வா என்ற ஒட்டகம் தொலைந்து போனது. நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அதைத் தேடுவதற்காக சென்றார்கள். நபி (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் உம்மாரா பின் ஹஸ்ம் அவர்களும் இருந்தார்கள். அன்னார் பைத்தே உக்பாவிலும் பங்கு பெற்றிருந்தார்கள். மேலும் ஏற்கனவே கூறப்பட்டது போன்று அன்னார் பத்ர் சஹாபியாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மாரா பின் ஹஸ்ம் அவர்களின் சகோதரராக இருந்தார்கள்.

அறிவிப்பாளர் அறிவிக்கின்றார். ஹஸ்ரத் உம்மாரா அவர்களின் பயணக் குழுவில் ஸைது பின் சலத் என்பவனும் இருந்தான். அவர்களின் சவாரிகளின் ஒட்டகங்களில் அமர்வதற்கான இருக்கையை வைப்பவனாக இருந்தான். அவன் பனூ கைனிகா கோத்திரத்தைச் சார்ந்தவனாக இருந்தான். மேலும் யூதனாகவும் இருந்தான். ஒட்டகத்தில் அமர்வதற்கான இடத்தில் சவாரிகளை ஏற்றுவதற்கென சில மக்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவன் யூதனாக ஆனான். பின்னர் அவன் முஸ்லிம் ஆனான். அவன் நயவஞ்சகத்தை வெளிப்படுத்தினான். அதே ஸைது முஸ்லிமாக இருந்தான்; ஆனால் அவனது உள்ளத்தில் நயவஞ்சகம் இருந்தது.

அவன் கூறினான். முஹம்மது (ஸல்) அவர்கள் தன்னை நபி என்று வாதம் செய்வதில்லையா? என்று அப்பாவி போன்று கேள்வி கேட்டான். மேலும் நபி (ஸல்) அவர்கள் உங்களுக்கு விண்ணின் செய்திகளைக் கூறுகின்றாரே! ஆனால் அவரது ஒட்டகம் எங்கு சென்றது என்று அவருக்குத் தெரியாதா? என்றும் அவன் கேட்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அப்போது ஹஸ்ரத் உம்மாரா அவர்கள் அங்கு அவனோடு இருந்தார்கள். எப்படியோ இந்த விஷயம் நபி (ஸல்) அவர்கள் வரை சென்றடைந்தது. அல்லது அல்லாஹ் அன்னாருக்கு அறிவித்துக் கொடுத்து விட்டான்.

எனவே அன்னார் கூறினார்கள்: ஒருவர் நிச்சயமாக இவ்வாறு கூறினார். அதாவது முஹம்மது (ஸல்) அவர்கள் உங்களிடம் தன்னை நபி என்று கூறுகின்றார். மேலும் அவர் உங்களுக்கு விண்ணின் செய்திகளை அறிவித்துக் கொடுப்பதாகவும் எண்ணுகிறார். ஆனால் அவருக்கு அவரது ஒட்டகம் எங்கே சென்றது என்று தெரியவில்லையே? என்று ஒரு நபர் கூறியதாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

இறைவன் மீது ஆணையாக! இறைவன் எனக்கு தந்த அறிவைத் தவிர்த்து வேறு எதனைக் குறித்தும் நான் அறிவதில்லை. மறைவானவற்றின் ஞானம் எனக்கு இல்லை. அல்லாஹ் கூறினால்தான் நான் கூறுவேன். பின்னர் அந்த நயவஞ்சகனின் வாயை அடைப்பதற்கு அல்லாஹ் எனக்கு இந்த செய்தியை தந்து விட்டான் என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதாவது நிச்சயமாக அல்லாஹ் ஒட்டகம் இந்த இடத்தில் இருப்பதாகவும் தனக்கு அறிவித்துக் கொடுத்து விட்டான் என்று கூறி அந்த இடத்தை நோக்கி சைகை செய்தார்கள். அந்த ஒட்டகத்தின் கயிறு ஒரு மரத்தில் சிக்கி இருப்பதாகவும் நீங்கள் சென்று அதனை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்று சஹாபாக்களிடத்தில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். சஹாபாக்கள் சென்று அந்த

ஒட்டகத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த நயவஞ்சகனின் வாயை அடைப்பதற்காக ஒட்டகம் எங்கிருக்கின்றது? எந்த இடத்தில் நிற்கின்றது? என்பது பற்றிய காட்சியையும் அல்லாஹ் அன்னாருக்கு காட்டினான்.

பைஹக்கி மற்றும் அபூ நயீம் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் உம்மாரா தமது ஒட்டகத்தின் மீது அமரும் இருக்கையை நோக்கி சென்றார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! இன்று ஒரு விநோதமான காரியம் நடந்தது. நபி (ஸல்) அவர்கள் ஒரு நபரின் கூற்றைப் பற்றி கூறினார்கள். அது பற்றி அல்லாஹ் தான் அன்னாருக்கு அறிவித்துக் கொடுத்தான். அது ஒரு நயவஞ்சகனின் கூற்றாக இருந்தது என்பதும் அல்லாஹ்தான் அதனை அன்னாருக்கு அறிவித்துக் கொடுத்தான் என்பதும் தெளிவானது. மேலும் அக்கூற்று ஸைது பின் சலத் என்பவனின் கூற்றாக இருந்தது.

ஹஸ்ரத் உம்மாராவின் பயணக் குழுவைச் சார்ந்த ஒருவர் கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஸைது நீங்கள் வருவதற்கு முன்னர் நீங்கள் கூறிய இந்த விஷயத்தைப் பற்றி கூறினான். நீங்கள் வருவதற்கு முன்னர் நிச்சயமாக ஸைது முற்றிலும் இவ்வாறே பேசினான். அப்போது ஹஸ்ரத் உம்மாரா அவர்கள் ஸைதின் கழுத்தைப் பிடித்து அமுக்கினார்கள். தனது தோழர்களிடம் கூறினார்கள்.

அல்லாஹ்வின் அடியார்களே! எனது பயணக் குழுவில் பாம்பு ஒன்று இருந்தது. நான் அதனை எனது இடத்திலிருந்து வெளியேற்றுவதை அறியாதவனாக இருந்தேன். பின்னர் ஸைதை நோக்கி கூறினார்கள். எதிர்வரும் நாட்களில் எனக்கு உன்னுடன் எந்த தொடர்பும் இருக்காது. ஸைது பிற்காலத்தில் தவ்பா செய்ததாக சிலர் கருதுகின்றனர். மேலும் சிலர் அவன் இதே போன்று தீமையான காரியங்களில் மரணிக்கும் வரை ஈடுபட்டுக் கொண்டிருந்தான் என்றும் கூறுகின்றார்கள்.

(தாரீஹுல் ஹமீஸ், தொகுதி 3 பக்கம் 18, கஸ்வா தபூக், 2009 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸய்யாத் பின் நயீம் ஹஸ்ரத் உம்மாரா பின் ஹஸ்ம் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான்கு விஷயங்கள் உள்ளன. அதன்படி எவர் செயலாற்றுவாரோ அவர் முஸ்லிம்களைச் சார்ந்தரவாகி விடுவார். அதில் எவர் ஒன்றை விட்டு விடுவாரோ அவருக்கு மீதமுள்ள மூன்று விஷயங்களும் எந்த பயனும் தராது.

ஹஸ்ரத் ஸய்யாத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் ஹஸ்ரத் உம்மாரா அவர்களிடம், அந்த நான்கு விஷயங்கள் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர்கள், தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ் என்று கூறினார்கள். இந்த நான்கு விஷயங்களில் ஈமான் கொள்வதும் அதன்படி அமல் செய்வதும் அவசியமாகும்.

(அஸதுல் காபா, தொகுதி 4 பக்கம் 129 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

தொழுகை கடமையாகும். ஸக்காத் எவர் மீது கடமையோ அவருக்கு அதனைச் செலுத்துவது அவசியமாகும். நோன்பும் கூட உடல்நலம் இருந்தால் நோற்பது அவசியமாகும். ஹஜ் செய்வதும் கடமையாகும். அந்த கடமைகளைச் செய்வது அவர்களுக்கு அவசியமாகும். எவ்வாறிருப்பினும் இந்த நான்கு காரியங்களின் மீது நம்பிக்கை கொள்வதும் அவசியமாகும். அதன்படி செயல்படுவதும் அவசியமாகும்.

இவ்விஷயங்கள் அஸதுல் காபா என்ற நூலில் எழுதப்பட்டுள்ளன. இந்த புத்தகங்களைக் கொண்டுதான் முஸ்லிம்கள் தாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கான அறிமுகத்தை செய்கின்றனர். மேலும் அவர்களில் பிறந்த உலமாக்கள் குஃப்ர் பத்வாவும் கொடுக்கின்றனர். மேலும் தங்களை முஸ்லிம்கள் என்றும் அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.

இன்று கூறப்பட இருக்கின்ற இரண்டாவது சஹாபா ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் ஆவார்கள். அவர்களின் மற்றொரு பெயர் அப்துர் ரஹ்மான் ஆகும். பனூ அதீ கோத்திரத்தைச் சார்ந்தவராக அன்னார் இருந்தார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் உம்மே அப்த் ஆகும். அன்னார் ஹிஜ்ரி 32 ஆம் ஆண்டு மரணமடைந்தார்கள். அன்னாரின் தந்தையாரின் பெயர் மஸ்ஊத் பின் காஃபில் ஆகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் அவர்கள் இஸ்லாத்தை ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்டவர்களைச் சார்ந்தவராவார். ஹஸ்ரத் உமர் அவர்களின் சகோதரியான ஃபாத்திமா பின்த் கிதாப் அவர்களும் அன்னாருடைய கணவர் சைது பின் ஸைது அவர்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது அன்னாரும் முஸ்லிமாகி இருந்தார்கள்.

(அஸதுல் காபா, தொகுதி 3 பக்கம் 382,387 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கம் என்ற இடத்திற்கு வருவதற்கு முன்பாகவே அன்னார் ஈமான் கொண்டிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 112 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

தாரே அர்கம் என்பது முஸ்லிம்கள் ஒன்று கூடுவதற்காக மக்காவில் ஏற்படுத்தப்பட்டிருந்த இடமாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட நபர்களில் ஆறாவது நபராக இருக்கின்றேன். தற்போது முழு பூமியிலும் எங்கள் ஆறு நபர்களைத் தவிர வேறு எந்த முஸ்லிமும் இல்லை. தாம் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவத்தை இவ்வாறு அப்துல்லாஹ் பின் மஸ்ஊது கூறுகின்றார்கள். நான் நல்லது கெட்டதை பிரித்தறியும் பருவத்தை அடைந்தேன். அப்போது என்னால் நல்ல காரியங்களைப் பிரித்தறிய அறிந்திருந்தேன். வித்தியாசம் எனக்குத் தெரிந்தது. நல்லது எது? கெட்டது எது? என்பதைப் புரியும் பருவத்தை நான் அடைந்திருந்தேன்.

ஒரு நாள் உக்பா பின் முஅய்த் என்பவரின் ஆடுகளை நான் மேய்த்துக் கொண்டிருந்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள் அங்கு வந்தார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் என்னிடம் சிறுவனே! உன்னிடம் சிறிது ஆட்டுப் பால் இருந்தால் கொண்டு வா என்று கூறினார்கள்.

அதற்கு நான், ஆம்! உள்ளது. நானோ அமீனாக அமானிதத்தை பேணுபவராக உள்ளேன். எனவே என்னால் உங்களுக்குத் தர இயலாது என்று கூறினேன்.

சிறு வயது முதலே அன்னாரிடத்தில் அதிக நன்மை இருந்தது. பால் தராத ஓர் ஆட்டை கொண்டு வரும்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு நான் இளம் ஆடு ஒன்றை அன்னாரிடத்தில் கொண்டு சென்றேன். அன்னார் அதனுடைய கால்களை கட்டினார்கள். அதனுடைய மடியில் கரங்களை வைத்து துஆ செய்தார்கள்.

எந்த அளவுக்கு என்றால் அதிலிருந்து பால் சுரந்தது. பின்னர் ஹஸ்ரத் அபூ பத்ர் அவர்கள் ஒரு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அதில் பாலைக் கரந்தார்கள். பின்னர் இதனை அருந்தும்படி ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ பக்ர் அவர்கள் பாலை குடித்தார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்களும் பாலை அருந்தினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மடுவிலிருந்து தனது கரங்களை அகற்றிக் கொண்டார்கள். பின்னர் அந்த ஆட்டின் மடுவானது வற்றிப் போனது. முதலில் எப்படி இருந்ததோ அதே போன்று ஆகி விட்டது. நான் கூறினேன்.

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் ஓதிய வேதத்தின் வசனங்களை எனக்கும் கற்றுத் தாருங்கள் என்று நான் கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் எனது தலையின் மீது கரங்களை வைத்து கூறினார்கள். நீங்கள் படித்த இளைஞராவீர்கள். தானும் படித்து பிறருக்கு கற்றுக் கொடுக்கும் இளைஞராவீர்கள். நான் நபி (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக எழுபது சூராக்களை மனனம் செய்து கொண்டேன்.

(அஸதுல் காபா, தொகுதி 3 பக்கம் 382 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்கள்:

அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் குரைஷிகளை சாராத நபராக இருந்தார்கள். அஸீல் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். மிகவும் ஏழை மனிதராக இருந்தார்கள். அன்னார் குரைஷிய தலைவர்களில் ஒருவரான அக்பா பின் அபீ முயீத்தின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்றுவதற்காக அன்னாரிடம் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தோழமை கிடைத்ததன் விளைவாக அன்னார் பின்னர் மார்க்க அறிஞராக உருவெடுத்தார்கள். ஹனஃபி ஃபிஹ்காவின் பெரும்பாலான விஷயங்கள் அன்னாரின் கூற்றுகள் மற்றும் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலின் பக்கம் 124)

அன்னாரின் மார்க்க அறிவின் சிறப்புகள் தொடர்பாக அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் இப்னு மஸ்வூது அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மக்களில் அனைவரையும் விட அல்லாஹ்வின் வேதத்தினை நன்கு அறிந்தவனாக உள்ளேன். திருக்குர்ஆனுடைய அனைத்து வசனங்களும் அதிகாரங்களும் எப்போது எங்கு இறங்கியது? என்பதனையும் நான் நன்கு அறிவேன். இது மக்களுக்கும் தெரியும்.

அபூ வாயில் கூறுகின்றார்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது இந்த விஷயத்தைக் கூறிய போது அன்னாரின் இந்த கூற்றை எவரும் மறுக்கவில்லை.

(காஸி முஹம்மது சுலைமான் அவர்களால் எழுதப்பட்ட அஸ்ஹாபே பத்ர் என்ற நூலிலிருந்து, பக்கம் 107 – 2015 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள இஸ்லாமிய்யா அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த நான்கு சஹாபாக்களிடமிருந்து திருக்குர்ஆனை ஓதுவதற்கும், கற்பதற்கும் அறிவுரை செய்திருந்தார்களோ அந்த பட்டியலில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் பெயரும் இடம் பெற்றிருந்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப், பாப் மனாகிப் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), ஹதீஸ் எண் 3760)

தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் என்ற புத்தகத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதன் விளக்கமாக இவ்வாறு கூறுகின்றார்கள்:

பொதுவாக மக்களிடத்தில் திருக்குர்ஆனை மனனம் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் மிக அதிகமாக இருந்து வந்தது. இந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை ஓதிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களின் ஒரு குழுவை நியமித்திருந்தார்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து குர்ஆனை கற்று மக்களுக்கு கற்றுக் கொடுத்து வந்தார்கள்.

இந்த நான்கு சஹாபாக்களும் ஆசிரியராக இருந்தார்கள். அவர்களின் வேலை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து திருக்குர்ஆனை கற்பதும், மக்களுக்கு அதனை கற்றுக் கொடுப்பதுமாக இருந்தது. பின்னர் அவர்களுக்குக் கீழ் இன்னும் ஏராளமான சஹாபாக்கள் இருந்தனர்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூது, சாலிம் மவ்லா, அபீ ஹுதைஃபா, மாஸ் பின் ஜபல் மற்றும் அபீ பின் கஅப் இவர்களில் இருவர் முஹாஜிரீன்களாக இருந்தனர். இரண்டு அன்ஸாரி சஹாபிகள் ஆவர். பணிகளைப் பொருத்தவரை அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ஒரு தொழிலாளி ஆவார்கள். சாலிம் என்பவர் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார். மாஸ் பின் ஜபல் மற்றும் அபீ பின் கஅப் அவர்களும் மதீனாவின் தலைவர்களைச் சார்ந்தவராக இருந்தனர்.

ஆக, ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் நபி (ஸல்) அவர்கள் கூட்டத்தை கருத்தில் கொண்டவாறு காரிகளை நியமித்து வந்தார்கள்.

ஹதீஸில் வந்துள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

خُذُوا الْقُرْاٰنَ مِنْ اَرْبَعَةٍ مِنْ عَبْدِاللّٰهِ ابْنِ مَسْعُوْدٍ وَسَالِمٍ وَ مَعَاذِ ابْنِ جَبَلٍ وَاُبَیِّ بْنِ کَعْبٍ

எவர்கள் திருக்குர்ஆனை ஓத வேண்டுமோ அவர்கள் இந்த நான்கு நபர்களிடமிருந்து ஓதிக் கொள்ளட்டும்: அப்துல்லாஹ் பின் மஸ்வூது, சாலிம், மஆஸ் பின் ஜபல், உபை பின் கஅப்.

இந்த நான்கு நபர்களைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இந்த நான்கு நபர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் இவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக திருக்குர்ஆனைக் கற்றுக் கொண்டார்கள். அதுமட்டுமல்ல ஓதிக் காட்டுவதும், அதிலுள்ள தவறுகளை திருத்திக் கொள்ளவும் செய்து வந்தார்கள். ஆயினும் இதனைத் தவிர்த்து ஏராளமான சஹாபிகள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக திருக்குர்ஆனை சிறிது சிறிதாக கற்று வந்துள்ளார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் திருக்குர்ஆனின் ஒரு சொல்லை இப்படி ஓதினார். ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரைத் தடுத்தார்கள். மேலும் இதனை இப்படி ஓதக்கூடாது. இப்படித்தான் ஓத வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள், இல்லை. எனக்கு நபி (ஸல்) அவர்கள் இப்படித்தான் கற்றுத் தந்தார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரைப் பிடித்துக் கொண்டு நபி (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். மேலும் இவர் திருக்குர்ஆனை தவறாக ஓதுகின்றார் என்று ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை திருக்குர்ஆனை ஓதிக்காட்டும்படி கூறினார்கள். அன்னார் ஓதி முடித்த பிறகு நபி (ஸல்) அவர்கள், இது சரிதான் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எனக்கு இதே சொல்லை வேறொரு வகையில் கற்றுத் தந்தீர்கள் என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், நீங்கள் ஓதுவதும் சரிதான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதிலிருந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து வெறும் நான்கு சஹாபாக்கள் மட்டும் திருக்குர்ஆனை கற்கவில்லை. மாறாக, மற்ற சஹாபாக்களும் கற்று வந்தனர். தாங்கள் எனக்கு இப்படிக் கற்றுக் கொடுத்தீர்களே என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டதிலிருந்தும் அவர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து திருக்குர்ஆனைக் கற்றிருக்கிறார்கள் என்பது தெரிகிறது.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 427–428)

ஓர் அறிவிப்பில் வருகிறது. மக்காவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு முதல் முதலில் திருக்குர்ஆனை ஓதியவர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது ஆவார்கள். அந்த சம்பவம் இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. அதாவது ஒரு நாள் சஹாபாக்கள் ஒன்று கூடி தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். குரைஷிகள் திருக்குர்ஆனை உரத்த குரலில் ஓதுவதை ஒருபோதும் கேட்டதில்லை. உங்களில் எவர் அவர்களுக்கு திருக்குர்ஆனை ஓதிக் காட்டுவார் என்று பேசிக் கொண்டனர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள், நான் ஓதிக் காட்டுகின்றேன் என்று கூறினார்கள்.

அதற்கு மக்கள் காஃபிர்கள் உங்களுக்கு துன்பங்களை தந்து விடக்கூடாதே என்று நாங்கள் துக்கப்படுகின்றோம் என்று கூறினர். செல்வாக்கு உள்ளவராக ஒருவர் இருந்தால் அவரை அடிப்பதற்கு குரைஷிகள் நினைத்தாலும் அவரது கோத்திரம் அவரை காப்பாற்றி விடும். நீங்கள் ஏழை மனிதராக இருக்கின்றீர்கள். உங்களை அடிக்க நினைத்தாலும் உங்களது சமுதாயம் உங்களை காப்பாற்றி விடும்.

இரண்டாம் நாள் முற்பகலில் அன்னார் மகாமே இப்ராஹீம் என்ற இடத்தை சென்றடைந்தார்கள். பின்னர் உரத்த குரலில் திருக்குர்ஆனை திலாவத் செய்ய ஆரம்பித்தார்கள்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ - اَلرَّحْمٰنُ عَلَّمَ الْقُرْاٰنَ என்பதை ஓதி திருக்குர்ஆனை திலாவத் செய்ய ஆரம்பித்தார்கள். குரைஷிகள் அந்நேரத்தில் தமது சபைகளில் அமர்ந்திருந்தார்கள். அந்த சஹாபியின் செயலால் அவர்கள் பெருத்த ஆச்சரியத்துடன் அன்னாரின் செயலை பார்த்தார்கள். சிலர் இது முஹம்மது (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அதே வசனங்கள் ஆயிற்றே என்று கூறினர்.

மேலும் அனைவரும் எழுந்து சென்று அன்னாரின் முகத்தில் ஓங்கி அடித்தார்கள். இங்கு முகத்தில் அடிப்பதற்கு துவங்கி இருந்தார்கள். ஆயினும் அன்னார் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே இருந்தார்கள். எவ்வளவு ஓத வேண்டும் என்று எண்ணி இருந்தார்களோ அதனை ஓதி முடித்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அங்கிருந்து முகம் திருப்பினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் சஹாபாக்களிடத்தில் திரும்பினார்கள். அன்னாரின் முகத்தில் அடிக்கப்பட்டதன் தடங்கள் இருந்தன. அதனைப் பார்த்து சஹாபாக்கள் கூறினர். இந்த விஷயத்திற்கே நாங்கள் அஞ்சினோம். அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் கூறினார்கள். இறைவனின் எதிரியான இவர்கள் எனது பார்வையில் ஒருபோதும் ஒரு பொருட்டாக இருந்ததில்லை.

ஆனால் அவர்கள் அடிக்கின்ற போது அவர்களை ஒரு பொருட்டாகவே நான் கருதவில்லை. நீங்கள் விரும்பினால் நாளையும் கூட நான் அவ்வாறு செய்ய தயாராக உள்ளேன். அதற்கு சஹாபாக்கள், வேண்டாம். இதுவே போதுமானதாகும். அவர்கள் செவிற்கே விரும்பாததையே நீர் அவர்களுக்கு ஓதிக்காட்டி விட்டீர் என்று சஹாபாக்கள் கூறினர்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 382, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரை தம்முடனேயே வைத்துக் கொண்டார்கள். அன்னார் நபி (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்றி வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள், நீங்கள் எனது குரலை கேட்கின்றபோது வீட்டில் பர்தா இல்லாத நிலையில் அனுமதியின்றி உள்ளே வரலாம் என அன்னாரிடத்தில் கூறியிருந்தார்கள். வீட்டில் பர்தா இருக்குமென்றால் பின்னர் அனுமதியின்றி வரக்கூடாது என்றும் கூறியிருந்தார்கள். பர்தா அகற்றப்பட்டு கதவுகளும் திறக்கப்பட்டு எனது குரலையும் நீங்கள் கேட்டால் உள்ளே வந்து விடலாம். உங்களுக்கு அனுமதி உள்ளது என்று கூறினார்கள்.

இதன் பொருள் என்னவென்றால், அப்போது அங்கு எந்த பெண்ணும் இல்லை என்பதாகும். அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது எல்லா பணிகளை செய்து வந்தார்கள். அன்னார் நபி (ஸல்) அவர்களுக்கு காலணிகளை அணியச் செய்வார்கள். எங்காவது அன்னாருடன் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அன்னாருடன் செல்வார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குளிக்கின்றபோது திரையிட்டு நின்று கொண்டிருப்பார்கள். சஹாபாக்களில் அன்னார் சாஹிபுஸ் ஸவாக் என்ற புனைப் பெயரால் மிகவும் பிரபலமாக இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 383, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

வேறோர் அறிவிப்பின்படி அன்னார் சாஹிபுஸ் சவாக் மற்றும் சாஹிபுல் வஸாத் மற்றும் சாஹிபுல் நஃலைன் என்று அழைக்கப்பட்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 113 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவராகவும், அன்னாரது படுக்கையின் விரிப்பை விரித்துக் கொடுப்பவராகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது மிஸ்வாக் மற்றும் குளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகளை கவனித்து வருபவராகவும் இருந்தார்கள்.

அரபியில் கூறப்பட்டுள்ள இதன் பொருள் என்னவென்றால், அன்னார் நபி (ஸல்) அவர்களது படுக்கையின் விரிப்புகளை விரித்துக் கொடுப்பவர் என்பதாகும். பல் துலக்குதற்கும், குளிப்பதற்குமுரிய ஏற்பாடுகளை செய்து வந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய கால்களை காலணிகளில் வைப்பதற்கும் பின்னர் அந்த காலணிகளை சரி செய்வதற்கும் பணியாற்றி வந்தார்கள். எனவே அன்னார் சாஹிபுன் நஃலைன் என்று அழைக்கப்படுகின்றார்கள். வுளூ செய்வதற்கான தண்ணீரையும் வைத்து வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் எப்போது பயணத்தில் இருந்தாலும் அன்னார் தான் அவர்களுடன் இருந்து தொண்டு செய்வார்கள்.

அபூ மலீஹ் அறிவிக்கின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் குளிக்கின்ற போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் திரையிட்டு வந்தார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் தூங்குகின்றபோது பணிகளுக்காக அன்னாரை எழுப்புவார்கள். நபி (ஸல்) அவர்களுடன் தற்காப்பு ஆயுதங்களுடன் அன்னாரும் உடன் பயணம் செய்வார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 113 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ மூஸா அறிவிக்கின்றார்கள்: நாங்கள் யமன் நாட்டிலிருந்து முதல் முறையாக வந்தபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அஹ்லே பைஅத்தைச் சார்ந்தவர் என்று நாங்கள் எண்ணி வந்தோம். ஏனென்றால் அவரும், அவருடைய தாயாரும் நபி (ஸல்) அவர்களது வீட்டிற்கு அடிக்கடி சென்று வந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 384, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

வீட்டுப் பணிகளை அவர்களே மேற்கொண்டு வந்தார்கள். அன்னாரது தாயாரும் அடிக்கடி சென்று வந்தார்கள். எனவே நாங்கள் மதீனாவுக்கு புதிதாக வந்திருந்ததால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அன்னாரின் குடும்பத்தைச் சார்ந்தவராக இருப்பார் என்று நாங்கள் எண்ணியிருந்தோம்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ஹிஜ்ரத்திலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹப்ஷா ஹிஜ்ரத்தின் போதும், மதீனாவின் ஹிஜ்ரத்தின் போதும் அன்னார் பங்கு பெற்றார்கள். பத்ர் போரிலும், அகழ் போரிலும், பைத்தே ரிழ்வான் சம்பவத்தின் போதும் அன்னார் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு யர்மூக் போரிலும் அன்னார் பங்கு பெற்றார்கள். எந்த சஹாபிகளுக்கு தமது வாழ்நாளிலேயே நபி (ஸல்) அவர்கள் சொர்க்கத்திற்கான நற்செய்தி வழங்கி இருந்தார்களோ அந்த சஹாபாக்களில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 383, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் யுத்தத்தில் அபூஜஹிலை அவனது முடிவை எட்டச் செய்ததில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் பங்கும் இருந்தது.

ஹஸ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் யுத்தத்தின் முடிவில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், எவராவது ஒருவர் சென்று அபூஜஹிலைப் பற்றிய சரியான தகவலை அறிந்து வர ஆயத்தமாக இருக்கின்றாரா? என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் சென்றார்கள். அபூஜஹில் போர் மைதானத்தில் மிகவும் பலத்த காயமுற்று கிடந்தான். மரண தருவாயில் அவன் இருந்ததை அன்னார் பார்த்தார்கள். அவனை அஃப்ராவின் மகன்கள் இந்த நிலைக்கு ஆளாக்கி இருந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அவனது தாடியைப் பிடித்து, நீ தான் அபூஜஹிலா? என்று கேட்டார்கள். அந்த நிலையிலும் அவன் ஆணவத்துடன் பதிலளித்தான். என்னை விட பெரிய தலைவனை நீங்கள் கொன்றிருக்கிறீர்களா? என்று கேட்டான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கத்ல் அபீ ஜஹ்ல், ஹதீஸ் எண் 3962)

சஹீஹ் முஸ்லிம் அறிவிப்பில் உள்ளது. முதலாவது அறிவிப்பு புகாரியின் அறிவிப்பாகும். சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பு என்னவென்றால், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அபூஜஹிலின் தாடியைப் பிடித்து நீ தான் அபூஜஹிலா? என்று கேட்டார்கள். அதற்கு அவன், இதற்கு முன்பு என்னை விட பெரிய மனிதனை நீங்கள் கொலை செய்திருக்கின்றீர்களா? என்று கேட்டான். மேலும் நான் ஒரு விவசாயியின் கைகளால் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடாதா? என்றும் அபூஜஹில் கூறினான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜிஹாது..., பாப் கத்ல் அபீ ஜஹ்ல், ஹதீஸ் எண் 4662)

மதீனாவின் இரு சிறுவர்கள் அபூஜஹிலை கொலை செய்திருந்தார்கள். மேலும் அவனை இந்த நிலைக்கு ஆளாக்கி இருந்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் இதற்குரிய விளக்கமாக தஃப்ஸீரே கபீரில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: எதிரி பொறாமை எனும் நெருப்பால் எரிந்து கொண்டிருந்தான். முழு வாழ்நாளும் எரிந்து கொண்டிருந்தான். பின்னர் மரண தருவாயிலும் கூட அதே நெருப்பில் அவன் எரிந்து கொண்டிருந்தான்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் கூறுகின்றார்கள்: போருக்குப் பிறகு நான் சென்று பார்த்தேன். அபூஜயில் ஓரிடத்தில் பலத்த காயமுற்று முனங்கிக் கொண்டிருந்தான். நான் அவனிடத்தில் சென்று, உனது நிலை எப்படி உள்ளது? என்று கேட்டேன். அதற்கு அவன், எனக்கு எனது மரணத்தைப் பற்றி எந்த கவலையும் இல்லை. படை வீரர் இறுதியில் மரணிக்கவே செய்வான். எனக்குள்ள கவலை என்னவென்றால், மதீனாவின் இரு அன்ஸார் சிறுவர்களின் கரங்களால் நான் கொல்லப்பட்டு விட்டேனே என்பதே ஆகும்.

எனக்காக இந்த ஓர் உதவியை மட்டும் செய்து விடுவாயாக. நான் செத்துக் கொண்டு தான் இருக்கின்றேன். வாளால் எனது கழுத்தை நீ வெட்டி விடுவாயாக. அதன் மூலம் எனது இந்த வேதனையும் தீர்ந்து விடும். ஆயினும் எனது கழுத்தை சற்று உயரமாக வெட்ட வேண்டும். ஏனென்றால் தளபதிகளின் கழுத்துகள் சற்று நீளமாகவே வெட்டப்படுவதுண்டு.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள், நான் உனது இந்த கடைசி ஆசையையும் கூட ஒருபோதும் முழுமை செய்ய மாட்டேன். நான் சற்று குறைவாகவே உனது கழுத்தை வெட்டுவேன் என்று கூறினார்கள். எனவே அன்னார் கழுத்தை சற்று குட்டையாக வாளால் வெட்டி அவனது தலையை உடலிருந்து துண்டித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

பாருங்கள். இது எத்தனை பெரிய நெருப்பாக இருந்தது. அந்த நெருப்பானது அபூஜஹிலை எரித்து சாம்பலாக்கிக் கொண்டிருந்தது. தனது வாழ்நாள் முழுவதும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்த விரும்பினானோ அதனை அவனால் ஏற்படுத்த முடியவில்லை. இதனால் அவன் எரிந்து கொண்டிருந்தான். பின்னர் மரண தருவாயிலும் கூட அவன் மதீனாவின் அனுபவமற்ற இரு சிறுவர்களின் கரங்களால் கொல்லப்பட்டு விட்டோமே என்ற நெருப்பில் அவன் எரிந்து கொண்டிருந்தான். மேலும் மரணிக்கின்ற போது அவனுக்கு இருந்த கடைசி ஆசையும் நிறைவேறவில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 461)

சுருக்கமாக, அவன் எல்லா வகையான நெருப்பிலும் எரிந்தவாறு இந்த உலகத்தை விட்டு பிரிந்து சென்றான்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தார்கள். அப்போது அன்னார் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் அவர்களது வீட்டில் தங்கினார்கள். சிலரைப் பொருத்தவதை அன்னார் சஅது பின் கேஸ்மா அவர்களின் வீட்டில் தங்கினார்கள். மக்காவில் அன்னாருக்கு ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களுடன் சகோரத்துவ பந்தம் இருந்தது.

மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் அன்னாரை மஆஸ் பின் ஜபல் அவர்களின் ஆன்மீக சகோதரராக ஆகினார்கள். மதீனாவின் ஆரம்ப நாட்களில் அன்னாரின் பொருளாதார நிலைமை மோசமாக இருந்தது. எனவே நபி (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுக்காக மஸ்ஜிது நபவிக்கு அருகில் தங்குவதற்கான இருப்பிடம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். பனூ ஸஹ்ராவின் சில மக்கள் ஹஸ்ரத்

அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை தங்களுடன் வைப்பதற்கு சற்று தயங்கினார்கள். ஏனென்றால், அவர் தொழிலாளியாகவும், ஏழையாகவும் இருக்கின்றார். நாமோ பெரிய மனிதர்களாக இருக்கின்றோம் என்ற எண்ணம் அவர்களிடத்தில் இருந்தது.

நபி (ஸல்) அவர்களுக்கு இது தெரிந்தவுடன் அந்த ஏழை மற்றும் பலவீனமான தொண்டருக்காக தனது தன்மானத்தை வெளிப்படுத்தியவாறு கூறினார்கள். நீங்கள் இந்த பாகுபாட்டை காட்டுவதற்காகவா இறைவன் என்னை அனுப்பியுள்ளான்? நினைவில் கொள்ளுங்கள். எந்த சமுதாயத்தில் பலவீனமானவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படுவதில்லையோ அந்த சமுதாயத்திற்கு இறைவன் ஒருபோதும் பரக்கத் செய்ய மாட்டான். அதன் பிறகு நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களுக்கு பள்ளிவாசலுக்கு அருகில் இடம் கொடுத்தார்கள். ஆனால் பனூ ஸஹ்ராவிற்கோ பள்ளிவாசலுக்கு பின்புறம் ஒரு ஓரத்தில் இடம் ஒதுக்கினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 113 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & ஹாபிழ் முஸஃப்பர் அஹ்மது அவர்களால் எழுதப்பட்ட சீரத் சஹாபா ரஸூல் (ஸல்) என்ற நூல், பக்கம் 275 – 2009 ஆம் ஆண்டு ரப்வாவிலுள்ள நஸாரத் இஷாஅத் சார்பில் அச்சிட்டு வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு மஸ்வூது அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள். எனக்கு சூரா நிஸாவை ஓதிக் காட்டுங்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் இந்த சம்பவத்தை அவர்களே கூறியவாறு அறிவிக்கின்றார்கள். நான் கூறினேன். நான் உங்களுக்கு என்ன ஓதிக் காட்டுவது? உங்கள் மீது தானே திருக்குர்ஆனே இறங்கியிருக்கின்றது? அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இரண்டாம் நபர் திருக்குர்ஆனை ஓதி அதை நான் கேட்பதை மிகவும் விரும்புகின்றேன் என்று கூறினார்கள். எனவே நான் ஓதத் துவங்கினேன்.

فَكَيْفَ اِذَا جِئْنَا مِنْ كُلِّ اُمَّةٍ بِشَهِيْدٍ وَّ جِئْنَا بِكَ عَلٰى هٰٓؤُلَآءِ شَهِيْدًا

அதாவது ஒவ்வொரு சமுதாயத்திலிருந்தும் நாம் ஒரு சாட்சியை அழைத்து வரும் போது உமது நிலை என்னவாக இருக்கும்? நாம் உம்மை அவர்கள் அனைவர் மீதும் சாட்சியாக கொண்டு வருவோம் (அன்நிஸா:42) என்ற வசனத்தை அடைந்த போது நபி (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. நபி (ஸல்) அவர்கள் போதும் நிறுத்துங்கள் என்று கூறினார்கள் என்று அறிவிப்பில் வருகிறது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 384, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயிலுல் குர்ஆன்... ஹதீஸ் எண் 5050)

ஒருமுறை ஹஸ்ரத் உமர் ஃபாரூக் அவர்கள் அரஃபாத் மைதானத்தில் நின்று கொண்டிருந்தார்கள். ஒரு நபர் அன்னாருக்கு தொண்டாற்றுவதற்காக ஆஜராகி அமீருல் மூஃமினீன் அவர்களே! (இந்த சம்பவம் கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்த சம்பவமாகும்) நான் கூஃபா நகரத்திலிருந்து வருகின்றேன். அங்கு ஒருவரை நான் கண்டேன். அவர் திருக்குர்ஆனை பார்க்காமல் தனது கரங்களால் குர்ஆன் வசனங்களை எழுதுகின்றார். அதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் அவர்கள் சற்று கோபத்துடன் எழுந்தார்கள்.

அந்த நபர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் பயந்தவாறு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் அன்னாரது கோபம் சற்று தணிந்தது. எந்த அளவுக்கு என்றால் முந்தைய இயல்பு நிலைக்கு திரும்பினார்கள். பின்னர் கூறினார்கள்: நான் இந்த பணிக்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை விட வேறு எவரையும் தகுதியுடையவராக கருதவில்லை என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல், தொகுதி 1 பக்கம் 128 ஹதீஸ் எண் 175 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பார்க்காமலேயே அவரால் திருக்குர்ஆனை எழுத முடியும்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை இரவு நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ரும் நானும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை கடந்து சென்றோம். அப்போது அவர் நவாஃபில் தொழுது கொண்டிருந்தார். அதில் திருக்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார். அவர் நின்று கொண்டிருந்தபோது திருக்குர்ஆன் ஓதப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நின்று கொண்டு அவரது திலாவத்தை கேட்கத் துவங்கினார்கள். பின்னர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ருகூ செய்தார்கள். பின்னர் சஜ்தா செய்தார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்துல்லாஹ்வே ! இப்போது நீ என்ன துஆ நீர் வேண்டினீரோ உமக்கு வழங்கப்படும். அடுத்து நபி (ஸல்) அவர்கள் அங்கிருந்து சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

திருக்குர்ஆன் எப்படி புத்தம் புதிதாக இறங்கியதோ அதே நிலையில் திருக்குர்ஆனை ஓதுவதில் எவர் மகிழ்ச்சியடையக் கூடியவராக இருப்பாரே அவர் திருக்குர்ஆனை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளட்டும் என்று கூறினார்கள். முஸ்னது அஹ்மது பின் ஹம்பலில் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல், தொகுதி 1 பக்கம் 156,157, ஹதீஸ் எண் 265 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் யஸீத் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் ஹுஸைஃபா அவர்களிடம் சென்றோம். மேலும் கூறினோம். நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமான மற்றும் நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகளை பின்பற்றி நடக்கக்கூடிய ஒரு மனிதனைப் பற்றி கூறுங்கள். அதன் மூலம் நாங்கள் அவரிடமிருந்து ஞானத்தைப் பெற்று ஹதீதுகளையும் கேட்டுக் கொள்வோம் என்று கூறினோம். அதற்கு அவர்கள் நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளில் அன்னாருக்கு மிகவும் நெருக்கமானவராக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் இருந்தார்கள் என்று கூறினார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 385, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

நபி (ஸல்) அவர்களது நடைமுறைகளின்படி அமல் செய்வதில் அன்னார் மிகவும் ஆர்வமிக்கவராகவும் அறிஞராகவும் திகழ்ந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னாரின் சஹாபாக்களிடம், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பழக்கங்களிலும் பண்புகளிலும் அன்னாரின் சஹாபாக்களில் யார் அன்னாருக்கு மிக நெருக்கமானவராக இருந்தார் என்று கேட்கப்பட்டது. யாருடைய வழிமுறையை நாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்கப்பட்டது.

அப்போது ஹஸ்ரத் ஹுதைஃபா அவர்கள், என்னுடைய அறிவிற்கேற்ப நடை, உடையிலும், பேச்சிலும், நல்லொழுக்கங்களின் அடிப்படையிலும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் மிக நெருக்கமானவராக இருந்தார்கள். இதன் காரணமாகவே நபி (ஸல்) அவர்கள் கூறி வந்தார்கள். என்ன என்ன விஷயங்கள்

அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களுக்கு விருப்பத்திற்குரியதாக இருக்குமோ எனது சமுதாயத்திற்காக அதுவே எனக்கும் விருப்பத்திற்குரியதாக இருக்கும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் மனாகிப் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி), ஹதீஸ் எண் 3762)

ஹஸ்ரத் அல்கமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் நடைமுறை, அவர்களின் அழகிய வாழ்க்கை மற்றும் நடுநிலையான பாங்கு ஆகியவை நபி (ஸல்) அவர்களோடு ஒப்புமைப்படுத்தப்பட்டு வந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 114 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்களின் மகன் அப்துல்லாஹ் அறிவிக்கின்றார்கள்: இரவில் தூங்கிய பிறகு தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுவது அன்னாரின் வழக்கமாக இருந்தது. ஒருநாள் இரவு காலை வரை அன்னார் தொழுகையில் தேனீக்கள் மொய்க்கின்றபோது ஏற்படும் சப்தத்தைப் போன்று முனங்கிக் கொண்டிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 386, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

அதாவது துஆ செய்யும்போது மிகவும் மெதுவாக முனங்கி அழுது கொண்டு துஆ செய்து கொண்டிருந்தார்கள். அல்லது திலாவத் செய்து கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நான் எவ்வித ஆலோசனையுமின்றி ஒருவரை அமீராக நியமித்தால் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை நியமிப்பேன்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 385, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஓரிடத்தில் ஹஸ்ரத் அலி அவர்கள் இதே விஷயத்தைக் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள். நான் முஸ்லிம்களின் ஆலோசனை கூட்டமின்றி ஒருவரை அமீராக்கினால் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை அமீராக்குவேன்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு முற்பகல் நேரத்தில் உறங்கியதில்லை.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 114 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்கள் தமது மனைவி மக்களை நேசித்து வந்தார்கள். தனது வீட்டினுள் நுழைகின்ற போது உரத்த குரலில் பேசுவார்கள். அதன் மூலம் வீட்டிலுள்ளவர்கள் விழிப்படைய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

அன்னாரது மனைவி ஹஸ்ரத் ஜைனப் அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு நாள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் வீட்டினுள் நுழைந்தார்கள். அப்போது ஒரு மூதாட்டி எனக்கு தாயத்து கட்டிக் கொண்டிருந்தார்கள். தாயத்து கட்டி பரக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது சில பெண்களின் பழக்கமாக உள்ளது.

எனவே நான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்களுக்கு பயந்து அவர்கள் இதை விரும்ப மாட்டார்கள் என்று கூறிக் கொண்டிருந்தேன். எனவே நான் அன்னாரின் குரலை கேட்டதுமே அதனை கட்டிலுக்கு கீழே மறைத்து விட்டேன். அன்னார் என்னிடத்தில் வந்து அமர்ந்து கொண்டார்கள். அன்னார் உனது கழுத்தில் என்ன மாட்டியிருக்கின்றாய்? என்று கேட்டார்கள். நான் தாயத்து என்று கூறினேன். அவர்கள் அதைப் பிடித்து இழுத்து அறுத்து எரிந்து விட்டார்கள். மேலும் அப்துல்லாஹ்வின் குடும்பத்தினர் ஷிர்க்கிலிருந்து தூய்மையானவர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன் என்று கூறினார்கள்.

பின்னர் அன்னார் கூறினார்கள்: நபி (ஸல்) அவர்கள் தாயத்து கட்டுவது ஷிர்க்கில் அடங்கும் என்று கூறியதை நான் கேட்டுள்ளேன். அதற்கு நான் நீங்கள் என்ன இப்படி கூறுகின்றீர்கள்? எனது கண்களில் சில பிரச்சனை இருந்தது. எனவே நான் ஒரு யூதரிடம் சென்று தாயத்து வாங்க சென்று கொண்டிருந்தேன். சில முறை எனது கண்களில் வேதனை ஏற்பட்டு கண்கள் வீங்கி விடும். கண்கணிலிருந்து தண்ணீர் வரும்.

அப்போது நான் அந்த யூதரிடமிருந்து தாயத்து வாங்கி கட்டிக் கொள்வேன். அதன் மூலம் எனக்கு குணம் கிடைத்து வந்தது என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்கள் என்னிடம் கூறினார்கள். இவை அனைத்தும் ஷய்த்தானிய செயலாகும். உமக்கு நபி (ஸல்) அவர்களின் இந்த துஆ ஒன்றே போதுமானதாகும். அந்த துஆ இதுவாகும்.

اَذْهِبِ الْبَأْسَ رَبَّ النَّاسِ اِشْفِ

وَاَنْتَ الشَّافِيْ لَا شِفَاءَ اِلَّا شِفَاءُكَ شِفَاءً لَا يُغَادِرُ سَقَمًا

அதாவது மக்களை பராமரிக்கக்கூடிய இறைவா! எனது வேதனையை அகற்றுவாயாக. எனக்கு குணமளிப்பாயாக. நீ மட்டுமே குணமளிப்பவனாவாய். உனது குணமளிப்பதைத் தவிர்த்து வேறு எவரும் குணமளிக்க முடியாது. எனக்கு நீ எந்த நோயும் எஞ்சியிருக்காத வகையில் குணமளிப்பாயாக.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 225 – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

இப்போது எந்த மக்கள் பீர்மார்களிடமும், பகீர்மார்களிடமும் செல்கின்றார்களோ அவர்கள் சிந்திக்க வேண்டும். அவர்கள் ஒருபோதும் தொழுவது கிடையாது. அவரிடமிருந்து தாயத்தைப் பெற்றுக் கொண்டு எங்களுக்கு உடல் நலம் கிடைத்து விட்டது. அல்லது எங்கள் மீது மிகப்பெரிய அருள் இறங்கி விட்டது. எங்களுக்கு பிள்ளைகள் கிடைத்து விட்டன. அல்லது இந்த வேலை முடிந்து விட்டது என்று கூறுகின்ற அனைத்து மக்களுக்கும் இதில் பதில் உள்ளது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் ஒரு முறை தனது ஒரு நண்பர் அபூ உமைர் அவர்களை சந்திக்க சென்றார்கள். தற்செயலாக அவர்கள் வீட்டில் இல்லை. அன்னார் அவருடைய மனைவிக்கு சலாம் கூறினார்கள். பின்னர் தண்ணீர் தரும்படி கேட்டார்கள். வீட்டில் குடிப்பதற்கு தண்ணீர் இருக்கவில்லை.

எனவே தனது வேலைக்காரியை பக்கத்து வீட்டிலிருந்து தண்ணீர் வாங்கி வரும்படி அனுப்பி வைத்தார். நீண்ட நேரமாகியும் திரும்பி வரவில்லை. வீட்டுப் பணி செய்யக்கூடிய அந்த பெண்ணை அபூ உமைர் அவர்களின் மனைவி சோம்பேறி என்று கூறி அவளை சபித்தார். ஹஸ்ரத் அப்துல்லாஹ் இந்த விஷயத்தைக் கேட்டு விட்டு தாகத்துடன் திரும்பி வந்து விட்டார்கள்.

இரண்டாவது நாள், அபூ உமைர் அவர்களை அன்னார் சந்தித்தார்கள். அப்போது இவ்வளவு விரைவாக திரும்பி சென்றதன் காரணத்தை அன்னாரிடம் கேட்டார். அதற்கு அன்னார் உமது மனைவி பணிப் பெண் மீது சாபமிட்டாள். அப்போது எனக்கு நபி (ஸல்) அவர்களின் இந்த கூற்று நினைவிற்கு வந்து விட்டது. அதாவது எவர் மீது சாபமிடப்படுகின்றதோ அவர் குற்றமற்றவர் என்றால் அந்த சாபம் சாபமிடுபவருக்கே திரும்பி விடும். ஒருவேளை பணிப் பெண் குற்றமற்றவளாக இருக்கின்ற நிலையில் அந்த

சாபம் திரும்புவதற்கு நான் காரணமாகி விடுவேன் என்று எண்ணி நான் அங்கிருந்து வந்து விட்டேன். தண்ணீரும் அருந்தவில்லை என்று கூறினார்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 223 – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

பாருங்கள். அல்லாஹ்வுடைய கோபத்திலிருந்து தப்பித்திருக்க வேண்டும் என்று இந்த மக்கள் எந்த அளவுக்கு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்திருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் மிகவும் ஒல்லியானவராகவும், உயரம் குறைந்தவராகவும் இருந்தார்கள். ஆனால் நல்ல உடை அணிந்திருந்தார்கள். வெள்ளை நிற உடை அணிந்து நறுமணம் பூசிக் கொள்வார்கள்.

ஹஸ்ரத் தல்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: அன்னார் தனது நறுமணத்தால் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 116,117 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஒரு பணிக்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை ஒரு மரத்தில் ஏறும்படி கட்டளையிட்டார்கள். சஹாபாக்கள் அன்னாருடைய மெலிந்த வெளிப்படையில் பலவீனமான கால்களைப் பார்த்து நகைத்தார்கள். அன்னாருக்கு பலவீனமான மெல்லிய கால்கள் இருந்தன. எனவே கேலி கிண்டல் செய்தனர்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஏன் சிரிக்கின்றீர்கள்? ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் நன்மையின் எடை என்பது மறுமை நாளன்று உஹது மலையின் எடையை விட கூடுதலாக இருக்கும்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 385, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் முடி எப்படிப்பட்டதாக இருந்ததென்றால், அன்னாருடைய காதுகள் வரை இருந்தது.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. அன்னாருடைய முடி கழுத்து வரை எட்டியிருந்தது. அவர்கள் தொழுகின்ற போது முடியை காதுகளுக்குப் பின்னால் தள்ளி விடுவார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 385 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஸைது பின் வஹப் அறிவிக்கின்றார். ஒரு நாள் ஹஸ்ரத் உமர் அவர்களிடத்தில் அமர்ந்திருந்தேன். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் வந்தார்கள். அவர்கள் சற்று குட்டையானவர்களாக இருந்தார்கள்.

எனவே அங்கு அமர்ந்திருந்த மற்றவர்களுக்கு பின்னால் மறைந்து விடுகின்ற அளவில் அன்னார் ஆகிவிட்டார்கள். ஏராளமான உயரமான மக்கள் அங்கு அமர்ந்திருந்தார்கள். அதனால் அவர்கள் மறைந்து போன சூழல் இருந்தது. அல்லது சரியாக அவர்கள் பார்க்க முடியாத அளவுக்கு இருந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களைப் பார்த்ததும் புன்னகைத்தார்கள். உமர் அவர்கள் அன்னாரிடமே சிரித்து சிரித்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அப்துல்லாஹ் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அதன் பிறகு அங்கிருந்து அவர்கள் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் அங்கிருந்து சென்ற பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரை பார்த்துக் கொண்டே இருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னார் பார்வையிலிருந்து மறைந்து போனார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் அவர்கள் கூறினார்கள். இந்த நபர் ஞானத்தால் நிறைந்த ஒரு பெரிய பாத்திரமாவார்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 386, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு மஸ்வூது அவர்களின் அறிவின் அந்தஸ்து மற்றும் தரத்தை இந்த விஷயத்திலிருந்து நம்மால் அறிந்து கொள்ள முடியும். ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் அவர்களின் மரணத்திற்கான தருணம் வந்தது. எங்களுக்கு ஏதாவதொரு அறிவுரை செய்யுங்கள் என்று அவர்களிடத்தில் கேட்கப்பட்டது.

அதற்கு அன்னார், அறிவும், ஈமானும் ஓர் அந்தஸ்தாகும். எவரெல்லாம் அதனை பெற முயற்சி செய்வாரோ அவர் பெற்றி பெறுகின்றார். பின்னர் அறிவையும், ஈமானையும் பெறுவதற்கு ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் அவர்கள் செயல்களை உள்ளடக்கிய நான்கு அறிஞர்களின் பெயர்களை கூறினார்கள். அதில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களின் பெயரும் இருந்தது.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 7 பக்கம் 375 ஹதீஸ் எண் 22455 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் அவர்கள் அன்னாரை கூஃபா நகரத்து மக்களின் தர்பிய்யத்திற்காக முரப்பியாக அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்களை கவர்னராக நியமித்து அனுப்பினார்கள். அத்துடன் கூஃபா வாசிகளுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்.

இவர்கள் இருவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆவர். மிகவும் சிறப்பான மக்கள் ஆவர். பத்ர் போர் சஹாபிகளாவர். நீங்கள் அவர்களை பின்பற்றி நடங்கள். அவர்களின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடங்கள். அவர்களின் கூற்றை கேளுங்கள். நான் உங்களுக்கு என்னை விட அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை மிகவும் சிறந்தவராக கருதுகின்றேன்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 385, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை கடைசி காலத்தில் நோயுற்றிருந்த போது நலம் விசாரிப்பதற்காக சென்றார்கள். மேலும் உங்களுக்கு ஏதும் முறையீடு உள்ளதா என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் கூறினார்கள். நீங்கள் என்னிடத்தில் என்ன முறையீட்டை கேட்கின்றீர்கள்? எனக்கு என் மீது தான் புகார் உள்ளது. நான் அந்த அளவிற்கு பாவம் செய்துள்ளேன்.

அடுத்து ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கேட்டார்கள். உங்களுக்கு ஏதாவது தேவை உள்ளதா? அதற்கு அன்னார், நான் இறைவனின் கருணையை வேண்டுகின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கேட்டார்கள். உங்களுக்கு சிகிச்சை செய்வதற்காக நான் மருத்துவர் யாரையாவது அனுப்பி வைக்கட்டுமா? அதற்கு அன்னார் கூறினார்கள். மருத்துவர் தான் என்னை நோயாளி ஆக்கி இருக்கின்றார்.

அதாவது நான் அல்லாஹ்வின் திருப்தியில் திருப்தி கொண்டிருக்கின்றேன். என்ன நடக்கின்றதோ அது இறைவனின் நாட்டப்படியே நடக்கின்றது. அடுத்து ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் கூறினார்கள். நான் உங்களுக்காக உதவித் தொகை எதையாவது நிர்ணயம் செய்யட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், எனக்கு அதற்கான தேவையில்லை என்று கூறினார்கள். ஹஸ்ரத்

உஸ்மான் அவர்கள், உங்களது மகள்களுக்கு அது பயன்படுமே என்று கூறினார்கள். அதற்கு அன்னார், எனது மகள் ஏழைகளாக வறுமைக்கு ஆளாகி விடுவார்களோ என்று நீங்கள் அஞ்சுகின்றீர்களா? என்று கேட்டார்கள்.

அடுத்து அன்னார் கூறினார்கள்: ஒவ்வோர் இரவும் சூரா வாகிஆவை ஓத வேண்டும் என்று நான் அவர்களுக்கு கட்டளை இட்டுள்ளேன். எவர் தினமும் இரவில் சூரா வாகிஆவை ஓதுவாரோ அவருக்கு ஒருபோதும் பசி பட்டினியின் துன்பம் ஏற்படாது என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 386,387 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இதுதான் இந்த ஒளிமயமான நட்சத்திரங்களுக்கு அல்லாஹ்வின் மீதிருந்த தவக்குல் மற்றும் போதுமென்ற மனம் ஆகும்.

சல்மா பின் தவாம் கூறுகின்றார். ஒரு நபர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களை சந்தித்தார். மேலும் தனது கனவு ஒன்றை அவரிடத்தில் கூறினார். நான் இரவில் உங்களை கனவில் பார்த்தேன் என்று கூறினார். மேலும் அதில் நபி (ஸல்) அவர்கள் ஒரு உயரமான மேடையில் அமர்ந்திருக்கின்றார்கள். நீங்கள் அந்த மேடைக்கு கீழே இருக்கின்றீர்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இப்னு மஸ்வூதே! என்னிடம் வாருங்கள். நீர் எனக்குப் பிறகு மிகவும் பற்றற்ற நிலையை மேற்கொண்டு விட்டீர்கள் என்று கூறினார்கள். அதற்கு இறைவன் மீது ஆணையாக! நீர் இந்த கனவைப் பார்த்தீரா? என்று அந்த நபரிடம் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்று கூறினார்.

பின்னர் அன்னார் அந்த நபரிடம் நீர் மதீனாவிலிருந்து எனது ஜனாஸா தொழுகையை தொழுவதற்காகவா வந்துள்ளீர்? என்று கேட்டார்கள். அதன் பொருள், எனது நேரம் நெருங்கி விட்டது என்பதாகும். அதற்கு சிறிது காலம் கழித்து அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 386, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் மரணத்திற்கு முன்பு ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கு அன்னாரின் நோயைப் பற்றிய தகவல் தெரிந்தபோது அன்னார் அவரை கூஃபாவிலிருந்து மதீனாவிற்கு அழைத்துக் கொண்டார்கள். மக்கள் அன்னாரை கூஃபாவிலேயே தங்கி இருக்கும்படி கூறினார்கள். நாங்கள் உங்களுக்கு பாதுகாப்பு வழங்குவோம் என்று மக்கள் கூறினார்கள். எவ்வாறிருப்பினும், உடல் ஆரோக்கியமான நிலையிலேயே மதீனா திரும்பி விட்டார்கள். அந்த நபரின் கனவையும் அன்னார் கேட்டிருந்தார்கள்.

அதன் பிறகு நடந்த சம்பவம் என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் அன்னாரை கூஃபாவிலிருந்து அழைத்தார்கள். கூஃபா வாசிகள் அன்னார் அங்கேயே தங்கியிருக்கும்படி கூறினார்கள். நாங்கள் உங்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றோம் என்றும் கூறினார்கள்.

ஆயினும் இது காலத்தின் கலீஃபாவின் கட்டளையாகும். அதற்கு கட்டுப்படுவது எனக்கு அவசியமாகும் என்று கூறி விட்டார்கள். பின்னர் மிக விரைவில் சில குழப்பங்கள் தோன்றும். நான் குழப்பங்களை தொடங்குபவனாக இருக்க விரும்பவில்லை என்றும் அன்னார் கூறினார்கள். இவ்வாறு கூறிவிட்டு காலத்தின் கலீஃபாவிடம் சென்று விட்டார்கள்.

அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 32 வது ஆண்டு மதீனாவில் நிகழ்ந்தது. ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். ஜன்னத்துல் பகீயில் அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள். மரணத்தின்போது அன்னாரது வயது 60 ஐ விட கூடுதலாக இருந்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 387, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

மற்றோர் அறிவிப்பின்படி மரணத்தின் போது அன்னாரின் வயது 70 ஐ விட சற்று கூடுதலாக இருந்தது.

(திப்காத்துல் குர்ரா (அப்துல்லாஹ் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டது) தொகுதி 2 பக்கம் 230 – கராச்சியில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்களின் மரணத்தின் போது ஹஸ்ரத் அபூ மூஸா அவர்கள் ஹஸ்ரத் அபூ மஸ்வூது அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் தமக்குப் பிறகு தனது சிறப்புகளை கொண்ட ஒரு நபரை விட்டு விட்டுச் சென்றிருப்பதாக தாங்கள் கருதுகின்றீர்களா? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ மசூது கூறினார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் நாங்கள் செல்வதற்கு அனுமதி கிடைக்காத நேரங்களில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் செல்வதற்கு அனுமதி கிடைத்து விடும். நபி (ஸல்) அவர்களின் சபையை விட்டு நாங்கள் வந்து விட்ட பிறகு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்களுக்கு நபி (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்றும் பாக்கியம் கிடைத்து வந்தது. அன்னாரின் தோழமையில் முழுமையாக பங்கு பெற்றார்கள். அவ்வாறிருக்க அவரைப் போன்ற சிறப்புகளை கொண்ட வேறொரு நபர் எவ்வாறு இருக்க முடியும்? என்று கேட்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா, தொகுதி 3 பக்கம் 119 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்துகளை பேணுவதில் மிகவும் பேணி வந்தார்கள். ஒரு முறை ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடம் கேட்கப்பட்டது. நபி (ஸல்) அவர்களின் இரு சஹாபாக்களில் ஒருவர் நோன்பு திறப்பதில் விரைந்து செயல்படுகின்றார். அதாவது சூரியன் மறைந்த உடனேயே நோன்பு திறந்து விடுகின்றார். தொழுகையையும் விரைவாக தொழுது விடுகின்றார். அதாவது சூரியன் மறைந்த உடனேயே தொழுது விடுகின்றார். ஆனால் மற்றொரு சஹாபி இந்த இரண்டு பணிகளையும் ஒப்பிடும் போது சற்று தாமதமாகவே செய்கின்றார். அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள், யார் விரைந்து செயல்படுகின்றார்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் விரைந்து செய்கின்றார்கள் என்று கூறப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் செய்கின்ற அதே நடைமுறை தான் நபி (ஸல்) அவர்களது நடைமுறையாக இருந்து வந்தது. நபி (ஸல்) அவர்களும் இப்படித்தான் அமல் செய்தார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல், தொகுதி 8 பக்கம் 51 ஹதீஸ் எண் 24716 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்களைப் பற்றி இன்னும் பல அறிவுப்புகளும் சம்பவங்களும் உள்ளன. இன்ஷா அல்லாஹ் அதனை நான் எதிர் வரும் நாட்களில் எடுத்துரைப்பேன். அல்லாஹ் நமக்கு இந்த ஒளிமயமான நட்சத்திரங்களின் முன்மாதிரிக்கு ஏற்பவும், நடைமுறைக்கு ஏற்பவும் நடக்கும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 25 October 2018 Issue No. 43

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

நல்லெண்ணம் கொண்ட நீதிபதியைப் பற்றி புகழுடன் நினைவு கூர்வது இவ்வுலகில் என்னென்றும் நிலைத்து நின்று கொண்டிருக்கும். இந்த வேலைக்காக அவரையே இறைவன் தேர்ந்தெடுத்திருப்பது அவரது நற்பாக்கியமாகும்.

இரு பிரிவினர் அவரிடம் வருகிறார்கள். அவர்களில் ஒருவர் அவரது மதத்தைச் சார்ந்த பாதிரியாராக இருக்கிறார். மற்றவர் அவரது மதத்திற்கு வேறுபட்டவராக இருக்கிறார். இந்நிலையில் இவர் (மிர்ஸா சாஹிப்) உங்கள் மதத்திற்கு கடும் எதிரியாவார் என்று அவரிடம் வாக்குமூலம் கொடுக்கும் நிலையானது ஒரு நீதிபதிக்கு எவ்வளவு சோதனைக்குரிய இடமாகும். ஆயினும் வீரரான அந்த பிலாத்து இச்சோதனையை மிக உறுதியுடன் தாங்கிக் கொண்டார். அவர்களின் குறை மதியின் காரணமாக, கிறித்தவ மார்க்கத்தைப் பற்றிக் கடினமான வார்த்தைகள் என கருதப்பட்ட இடங்களையும் எனது நூல்களிலிருந்து அவருக்குக் காட்டப்பட்டது. ஆயினும் அந்நீதிபதியின் முகத்தில் சிறிதளவும் மாற்றம் உண்டாகவில்லை.

ஏனெனில் அவரது தெளிந்த மனசாட்சியின் காரணத்தால் உண்மையை அவர் புரிந்து கொண்டார். மேலும் அவர் வழக்கின் உண்மையான அடிப்படையை உண்மையான உள்ளத்துடன் ஆராய்ந்து வந்ததனால் இறைவன் அவருக்கு உதவி புரிந்தான். மேலும் அவரது உள்ளத்தில் சத்தியத்தைப் பற்றிய வெளிப்பாட்டையும் இறக்கினான். இதனால் உண்மையாக அவரிடம் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. மேலும் நீதியை நிலைநாட்டும் வழி அவருக்குத் தென்பட்டதைக் குறித்து அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதனால் அவர் நீதியை முன்வைத்து வாதிக்கு எதிராக எனக்கு அமர்வதற்கு இருக்கை அளித்தார்.

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி தலைமை புரோகிதனைப் போல் எனக்கு விரோதமாகச் சாட்சியம் அளிக்க வந்த போது நான் இருக்கையில் அமர்ந்திருப்பதைக் கண்ட அவர், எனது எந்த இழிவைக் காண்பதற்கு அவரது கண்கள் ஆசை கொண்டவையாக இருந்தனவோ அந்த இழிவை அவரால் காண முடியவில்லை. அப்போது சம அந்தஸ்தாவது தமக்குக் கிடைத்தால் அதுவே போதுமானது என நினைத்து அவரும் அந்த பிலாத்திடம் அமர்வதற்கு இருக்கை ஒன்றை விரும்பிக் கேட்டார். ஆனால், அந்த பிலாத்து அவரைக் கண்டித்தது மட்டுமல்லாமல் உமக்கும் உமது தந்தைக்கும் ஒருபோதும் இருக்கை கிடைத்ததில்லை. மேலும் எங்களது அலுவலகத்தில் உமக்கு இருக்கைக்காக எவ்வித கட்டளையும் இல்லை என உரத்த குரலில் கூறினார்.

இப்போது இந்த வேறுபாடும் கவனத்திற்குரியதாயிருக்கிறது. அதாவது முதலாவது பிலாத்து யூதர்களுக்கு அஞ்சி அவர்களது கண்ணியமிக்க சில நாட்களுக்கு அமர்வதற்கான இருக்கை அளித்தார். ஆனால் குற்றவாளிகளைப் போல் கொண்டு வரப்பட்ட ஹஸ்ரத் ஈஸா மஸீஹை நிற்க வைத்தார். இருந்த போதிலும் அவர் இதயப்பூர்வமாக அவரது நன்மையை விரும்பக்கூடியவராக இருந்தார். அது மட்டும் அல்லாமல் அவர் அவரது சீடரைப் போல் இருந்து வந்தார். அவரது மனைவியாரும், மஸீஹின் சிறப்புமிக்க சீடராகவும் இருந்தார். மேலும் இறைநேசர் என்று அழைக்கப்பட்டு வந்தார். ஆயினும் அவரது பீதியானது அநீதியாக நிரபராதியான மஸீஹை யூதர்களிடம் ஒப்படைக்கும்படியான தவறான கட்டளையைப் பிறப்பிக்கச் செய்தது. என்னைப் போன்று அவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படவில்லை.

மாறாக, சிறிய நிலையில் மார்க்க வேறுபாடு மட்டுமே காரணமாக இருந்தது. ஆயினும் அந்த ரோமரான பிலாத்து உறுதியான மனம் கொண்டவராக இருக்கவில்லை. அரசரிடம் அவரைப் பற்றி முறையீடு செய்யப்படும் என்பதைக் கேள்வியுற்றதுமே அவர் பீதியடைந்து விட்டார்.

மேலும் முதலாவது பிலாத்து இந்த இரண்டாவது பிலாத்து இருவரிடமும் காணப்படும் வேறு ஒரு ஒப்புமையும் ஞாபகம் வைக்கத் தகுதியுள்ளதாகும். அதாவது, மஸீஹ் இப்னு மர்யம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது முதல் பிலாத்து யூதர்களிடம் நான் இந்த மனிதரிடம் எவ்வித குற்றமும் காணவில்லையே எனக் கூறினார். இவ்வாறே இறுதி மஸீஹ் இறுதி பிலாத்துக்கு முன் சென்றபோது என் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருப்பதால் இதற்கு மறுமொழி அளிக்கச் சில நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும் என்று இந்த (வாக்களிக்கப்பட்ட) மஸீஹ் கூறியதும் நான் உங்கள் மீது எவ்வித குற்றமும் சுமத்தவில்லையே என்று விடை அளித்தார்.

இந்த இரண்டு பிலாத்துக்களின் இவ்விரண்டு கூற்றுகளிலும் ஒப்புமை காணப்படுகிறது. இதில் வேறுபாடு இருக்குமானால் இந்த அளவில்தான் உள்ளது. அதாவது, முதலாவது, பிலாத்து தனது வார்த்தையில் நிலைநிற்க முடியவில்லை. உம்மைக் குறித்து அரசிடம் முறையீடு செய்யப்படும் என்று அவரிடம் கூறப்பட்டதும் அவர் அச்சம் அடைந்து விட்டார். அவர் தெரிந்து கொண்டே ஹஸ்ரத் மஸீஹைக் கொலையாளிகளான யூதர்களிடம் ஒப்படைத்தார்.

பிலாத்தும் அவரது மனைவியும் அவர் மீது நல்ல விசுவாசம் கொண்டவர்களாக இருந்தமையால் அவரை அவர்களிடம் ஒப்படைத்ததில் அவ்விருவருக்கும் கவலை இருந்து வந்தது. ஆயினும் யூதர்களின் பெருங்கூக்குரலைக் கண்டு கோழைத்தனம் அவர் மீது வெற்றி கொண்டு விட்டது.

ஆயினும், சந்தேகமின்றி மஸீஹின் உயிர் சிலுவையில் கொல்லப்படுவதிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர் மறைமுகமாக மிகவும் முயற்சித்தார். இம்முயற்சியில் அவர் வெற்றியும் கண்டார். ஆயினும் மஸீஹ் சிலுவையில் ஏற்றப்பட்ட பிறகு மிகக் கொடிய வேதனையின் காரணத்தால் மரணத்தைப் போன்ற கடுமையான மயக்க நிலை அவருக்கு உண்டானது. எவ்வாறாயினும் ரோமரான பிலாத்து என்பவர் எடுத்த முயற்சியால் மஸீஹ் இப்னு மர்யமின் உயிர் காப்பாற்றப்பட்டது. உயிர் தப்புவதற்காக மஸீஹ் செய்த பிரார்த்தனையும் முன்பே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. (எபிரேயர் அத்தியாயம் 5 வசனம் 7 காண்க)☆

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 55–57)

☆அடிக்குறிப்பு:– யூனுஸின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் உங்களுக்குக் காட்டப்பட மாட்டாது என மஸீஹ் முன்னறிவிப்பாக தாமும் கூறியிருந்தார். அக்கூற்றின் மூலம் குறிப்பாகக் கூறியது என்னவென்றால் எவ்வாறு யூனுஸ் உயிருடன் மீனின் வயிற்றில் நுழைந்து உயிருடனேயே வெளிவந்தாரோ அவ்வாறே நானும் உயிருடன் கபரில் நுழைந்து உயிருடனேயே வெளிவருவேன் என்பதாகும்.

ஆகவே மஸீஹ் சிலுவையிலிருந்து கீழே உயிருடன் இறக்கப்படாமலும் உயிருடன் கல்லறையில் நுழையாமலும் இருந்திருந்தால் இந்த அடையாளம் எவ்வாறு நிறைவேறி இருக்க முடியும்? மேலும் வேறு எந்த அடையாளமும் காட்டப்பட மாட்டாது என்று ஹஸ்ரத் மஸீஹ் கூறியுள்ளார். இக்கூற்றின் மூலம் மஸீஹ் வானத்திற்குப்போன ஓர் அடையாளத்தையும் காட்டியுள்ளார் என்று கூறக்கூடியவர்களது கூற்றையும் அவர் நிராகரித்துள்ளார் – நூலாசிரியர்.

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad